Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 18 செவ்வாய்க்கிழமை (31-03-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 125

## ஹெலியிலிருந்து துண்டுப்பிரசுரம்

தென்மராட்சி, மார்ச் 31

கடந்த ஞாயிறன்று ஹெலியிலிருந்து வீசப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் மீசாலை, வேம்பிராய், சரசாலை ஆகிய பகுதிகளில் வீழ்ந்தன.

(உ-117)

## பூநகரியில் குண்டு வீச்சு!

யாழ்ப்பாணம், மார்ச் 31

பூநகரிப் பகுதியில் நேற்று முன் தினம் காலை 9. 30 மணிமுதல் நண்பகல் 12 மணி வரை பரவலாக விமானத் தாக்குதல்கள் இடம்பெற்றன இக்குண்டு வீச்சால் ஒரு வீடு முற்றாகச் சேதமடைந்தது. மற்றும் பல வீடுகள் சிறு சேதத்திற்குள்ளாகின.

அவ்ரோ விமானம் ஒன்று செட்டியா குறிச்சி பகுதியில் மூன்று குண்டுகளையும்—

4 ஆம் கட்டைப் பகுதியில் 4 குண்டுகளையும் வீசியது.

(உ-3-117)

## செஞ். குழு பலாலி செல்லும்

யாழ்ப்பாணம், மார்ச் 31

பலாலி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் நலன்களைக் கண்டறிய செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு இவ்வாரம் அங்கு செல்லவிருக்கிறது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். வதிவிடப் பிரதிநிதி திரு. ஜீன் பிறாங்கொயிஸ், செல்வி மரிஜோ ஆகியோரும் வைத்திய குழுவினரும் அங்கு செல்லவுள்ளனர்.

(உ-3)

## ஆசிரியர் சம்பளம் இன்னுமில்லை

யாழ்ப்பாணம், மார்ச் 31

யாழ். மாவட்டத்தில் உள்ள ஆசிரியர்களுக்கு கடந்த 20 ஆம் திகதி வழங்கப்பட வேண்டிய இம்மாதத்துக்குரிய சம்பளம் இன்னும் வழங்கப்படவில்லை.

ஆனால் யாழ். கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த சகல ஊழியர்களுக்கும் இம்மாதம் சம்பளம் வழங்கப்பட்டுவிட்டது. இவர்களுக்கு மாதாந்தம் இருபத்தைந்தாம் திகதி சம்பளம் வழங்கப்படுவதுண்டு.

ஆசிரியர்களின் சம்பளம் வழங்கப்படாததைக் கண்டித்து அகில இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் நேற்று அறிக்கை ஒன்றை விடுத்தது. ஆசிரியர் சம்பளத்தை தாமதமில்லாது வழங்க வேண்டும் என்று அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டது.

[அ]

## முச்சந்தி முரளி



கடும் பயிற்சியினை கடுமையாக்கியிட்டுது போலை...!

# யாழ். நன்னீர்த் திட்டத்துக்கு நோர்வே தமிழர் உதவுவர்

## தொண்டர் நிறுவனமும் நிதிவழங்கும்

யாழ்ப்பாணம், மார்ச் 31

யாழ்ப்பாணக் குடாநாட்டின் நன்னீர் திட்டத்துக்கு நிதி உதவி வழங்குவதற்கு நோர்வேயில் உள்ள தமிழ் மக்கள் முன்வந்திருக்கின்றனர்.

முப்பது கோடி ரூபா செலவில் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள இத்திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்கு சர்வதேச தொண்டர் நிறுவனம் ஒன்றும் இணக்கம் தெரிவித்திருக்கிறது.

யாழ்ப்பாண நகரிலும், குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலும் தண்ணீர் உவராகும் தன்மை அதிகரித்து வருகிறது. அதனால் குடிதண்ணீர் பிரச்சினை வெளியில் புலப்படாத ஒன்றாக உருவெடுத்துள்ளது.

யாழ். குடா கடலேரிகளில் இருந்து உவர் நீர் தொண்டமானாறு, அரியாலை அணைகளுக்குள் சேர்வதால் அவற்றைச் சூழ்ந்த பெரும் விசாலமான பிரதேசங்களில் நன்னீர் கிடைப்பது அரிதாகி வருகிறது.

1952இல் இருந்து செயற்பட்டு வந்த இந்த அணைகள் 1974 இல் சேதமடைந்தன. அதன் பின் புனரமைக்கப்படவில்லை. அவற்றைப் புனர

[6 ஆம் பக்கம் பார்க்க]

## தபால்கள் இன்று வரும்

யாழ்ப்பாணம், மார்ச். 31

உணவுப் பொருள்கள், மற்றும் தபால் பொதிகளுடன் 'லில்லி' கப்பல் இன்று காலை பருத்தித்துறைக்கு வந்துசேரவுள்ளது.

பருத்தித்துறையில் பொருள்கள் இறக்கி முடித்துக் கொண்டு 'குமண' கப்பல் இன்று திருகோணமலை நோக்கிப் புறப்படுகிறது.

(உ-3)

## மீனவர் மீது சூடு!

யாழ்ப்பாணம், மார்ச், 31

கல்முனைப்பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் நேற்று முன்தினம் இரவு அரியாலை கிழக்கு பகுதியை நோக்கி சரமாரியாக மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் [illegible] தொழிலில் ஈடுபட்டிருந்த [illegible]ர்களின் படகு ஒன்று சேதமடைந்தது.

அதேவேளை—

மண்டைதீவிலிருந்தும் கு[illegible] நகர்ப் பகுதியை நோக்கி [illegible] பாக்கிப் பிரயோகம் மேற் கொள்ளப்பட்டது.

(உ-3)

★ வடக்கிற்கு விஜயம் செய்யும்

## எட்டுப் பிக்குகள் யாழ். வீதிகளில் பாத்திரம் ஏந்தி தானம் பெறுவர்!

கொழும்பு, மார்ச் 31

அமரபுர பீடத்தின் பதிவாளர் சங்கைக்குரிய பலப்பிட்டிய சித்தார்த்த தேரர் தலைமையிலான பௌத்த மதகுருமார் தூதுக்குழு தமிழ் - சிங்களப் புத்தாண்டு சமயத்தில் யாழ்ப்பாணத்துக்குப் புறப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எட்டுப் பேர் அங்கம் வகிக்கும் இத்தூதுக் குழுவில் தமிழில் பரிச்சயம் உள்ள சில பௌத்த பிக்குகளும் இருப்பர் என்று சித்தார்த்த தேரர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இரவு முழுவதும் பிரித் ஓதும் நிகழ்ச்சி ஒன்றை நடத்துவதற்கும், யாழ்ப்பாணம் வீதிகளில் அட்சய பாத்திரம் ஏந்தி தானம் பெறுவதற்கும் பௌத்த மதக் குழுவினர் திட்டமிட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள படையினரையும், பொலீஸாரையும் சந்திக்கத் தாம் விருப்பம் கொண்டுள்ளதாகவும் சங்கைக்குரிய பலப்பிட்டியே சித்தார்த்த மகாநாயக்க தேரர் சொன்னார்.

யாழ். ஆஸ்பத்திரிக்கும் பௌத்த தூதுக்குழு விஜயம் செய்யவுள்ளது.

உத்தேச யாழ். விஜயம் தொடர்பாக சித்தார்த்த தேரர் செஞ்சிலுவைச் சங்கச்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## தாயகம் திரும்பும் அகதிகள் படையினரால் துன்புறுத்தல்

யாழ்ப்பாணம், மார்ச் 31

தமிழகத்தில் இருந்து கப்பல் மூலம் தலைமன்னார் திரும்பும் அகதிகள் படையினரால் கடும் சோதனைக்கும் கெடுபிடிக்கும் உள்ளாக்கப்படுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த 25 ஆம் திகதி கப்பலில் வந்திறங்கிய தலைமன்னாரைச் சேர்ந்த அன்ரன், நெவில் லூயிஸ் ஆகியோர் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் அன்ரன் மறுநாள் விடுதலை செய்யப்பட்டார். மற்றவர் தள்ளாடி முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டார்.

அகதிகள் கெடுபிடிக்கு உள்ளாக்கப்படுவது குறித்து ஐ. நா. அகதிகள் தூதரக அதிகாரிகள் கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளின் கவனத்துக் சுகுக் கொண்டு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

[உ-ε]

## புல்ஜன்ஸ் கடத்தல் வழக்கில் காமினி விடுதலையானார்!

பேராசிரியர் புல்ஜன்ஸ் கடத்தல் வழக்கில் முன்னாள் அமைச்சர் காமினி திஸாநாயக்கா விடுதலை செய்யப்பட்டார்.

1988 ஆம் ஆண்டு ஜூன் மாதம் பேராசிரியர் புல்ஜன்ஸ் கடத்தப்பட்ட சம்பவத்தில் சம்பந்தப்பட்டிருந்தார் என காமினி திஸாநாயக்கா மீதும் மற்றும் சிலர் மீதும் குஞ்றஞ் சாட்டப்பட்ருந்தது.

இவ் வழக்கை விசாரித்த உயர் நீதிமன்ற நீதியரசர் டி. பி. உனம்புவே நேற்று காமினி திஸாநாயக்காவை விடுதலை செய்தார்.

காமினிக்கு எதிராகச் சாட்சியமளித்த ஒருவர், தான் பொய் சாட்சியமளித்ததாகப் பின்னர் நீதிமன்றத்தில் ஒப்புக் கொண்டிருந்தார். அதனை காமினி தரப்புச் சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டியதை அடுத்து, காமினி விடுதலை செய்யப்பட்டார்.

எனினும் இவ் வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள மற்ற இருவர்தொடர்பான தீர்ப்பை நாளை புதன்கிழமை வழங்குவதாக நீதிபதி தெரிவித்தார்.

(உ-10)

அம்பேபுச ராணுவ முகாமில்

## 18 இராணுவத்தினருக்கு திடீரென சுகயீனம்!

### இருவர் பின்னர் உயிரிழந்தனர்

கொழும்பு, மார்ச் 31

அம்பேபுச இராணுவ முகாமிற்கு புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட இராணுவத்தினரில் 18 பேர் கடந்த வியாழக்கிழமை திடீர் சுகவீன முற்றதாக அறிவிக்கப்படுகிறது.

உடனடியாக இவர்கள் வட்டுப்பிட்டிவெல, மிகிரிகம மற்றும் கொழும்பு ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் இருவர் பின்னர் மரணமானார்கள்

திடீர் சுகவீனத்துக்கான காரணம் குறித்துக் கருத்துத் தெரிவிக்க ஆஸ்பத்திரி வட்டாரங்கள் மறுத்துவிட்டன.

ஆனால் இரண்டு நாட்கள் வெய்யிலில் அதிகமாக ஓடிப் பயிற்சி செய்ததே இரண்டு இராணுவத்தினரின் மரணத்துக்கும் காரணம் என்று வட்டுப்பிட்டிவெல ஆஸ்பத்திரி டாக்டர் சந்தன குணதிலக்க தெரிவித்தார்.

{உ-த]

# யுத்த நிறுத்தம் செய்யுமாறு ஆயர்கள் சபை அறிக்கை

கொழும்பு, மார்ச், 31

இலங்கை அரசுப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நடைபெறும் யுத்தம் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

—இவ்வாறு இலங்கை றோமன் கத்தோலிக்க [illegible] பீடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

ஆயர் பிராங்க் மாக்கஸ் பெர்னாண்டோ மற்றும் வியானிபெர்னாண்டோ தலைமையில் ஒரு தூதுக்குழு கடந்த [illegible] திரும்பியது. அதன் பின்னர் [illegible] அறிக்கையிலேயே யுத்த நிறுத்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது,

வடபகுதியில் உணவுப் பற்றாக்குறையும் மருந்துத் தட்டுப்பாடும் நிலவுகின்றன. மக்கள் பலரும் உடல் நலிவோடு காணப்படுகின்றனர். ஆண், பெண், குழந்தைகள் அனை

[6 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டிப் பகுதியிலும் குண்டு வெடிப்பு அதிர்வு!

கண்டி வத்தேகம மடவளைப் பகுதியில் கடந்த சனிக்கிழமை காலை இரண்டு பாரிய குண்டுவெடிப்புச் சத்தங்கள் கேட்டதாகவும்—

அவற்றைத் தொடர்ந்து பல கட்டடங்கள் அதிர்வுக்குள்ளாகியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காலை 10-30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தினால் மக்கள் பெரும் பீதியடைந்தனர்.

இதே வேளை—

நண்பகல் அளவில் கண்டி நகர்ப் பகுதியிலும் பலத்த வெடிச் சத்தம் கேட்டது.

இந்தச் சத்தம் கேட்டபின் விமானம் ஒன்று பறந்து கொண்டிருந்ததை காணக்கூடியதாக இருந்தது என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது.

## எதிரணியின் கூட்டம் நாளை

தென்னிலங்கையில் எதிர்க்கட்சியினர் நடத்திவரும் பாதயாத்திரையின் முடிவில் மாபெரும் இறுதிக் கூட்டம் நாளை முதலாம் திகதி கதிர்காமத்தில் நடைபெறும்.

பாதயாத்திரையின் பிரதான அமைப்பாளரும் அம்பாந்தோட்டை மாவட்ட எம். பி. யுமான மகிந்த ராஜபக்ஸ இத்தகவலைத் தெரிவித்தார். (உ-ந)

# இன்று

சாவகச்சேரி லயன்ஸ் கழகமும், வியோ கழகமும் இணைந்து தென்மராட்சிக் கோட்ட பாடசாலைகளுக்கிடையில் நடத்தும் உதைபந்தாட்டம், கரபந்தாட்டம், தாச்சி ஆகிய விளையாட்டுப் போட்டிகளின் இறுதியாட்டங்கள் இன்றும் நாளையும் சாவகச்சேரி நகர சபை பொதுவிளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன.

தென்மராட்சிப்பகுதி விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான போட்டிகள் ஏப்ரல் 3 ஆம் திகதி தொடக்கம் 9 ஆம் திகதி வரை நடைபெறுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. [உ-117]

★ ★ ★

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடத்தப்படும் வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் இரண்டு ஆட்டங்கள் இன்று மாலை யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

பிற்பகல் 3 மணிக்கு முதலாவது ஆட்டத்தில் யுத்காமல் அணியை எதிர்த்து சென். அன்றவீஸ் 'ஏ' அணி மோதும். 4-30 மணிக்கு நடைபெறும் இரண்டாவது ஆட்டத்தில் சென். மேரீஸ் நீல அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய ''பி'' அணி மோதும்.

★ ★ ★

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் முன்னாள் தலைவர் அமரர் டி. எஸ். கே. வணசிங்காவின் நினைவுப் பேருரை நிகழ்ச்சி இன்று கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறுகிறது.

இ. த. ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு. த. மகாசிவம் தலைமையில் பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும் விழாவில் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் நினைவுப் பேருரை நிகழ்த்துவார். பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன், அமரர் வணசிங்காவின் உருவப் படத்தைத் திரைநீக்கம் செய்து வைப்பார். யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. க. சின்னத்தம்பி தொடக்கவுரை நிகழ்த்துவார். (அ)

## கோவில் உற்சவங்கள்

சுழிபுரம், மார்ச் 31

சுழிபுரம் பறாளை சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் இலட்சார்ச்சனை இன்று செவ்வாய்க்கிழமை முதல் தொடர்ந்து ஒன்பது நாட்களுக்கு நடைபெறும்.

★ ★ ★

யாழ். சுந்தர்மடம் ரயில்வே கடவை ஞான வைரவர் ஆலயத்தில் இன்று மாலை 5 மணிக்கு தீக்குளிப்பு நிகழ்ச்சி இடம் பெறும்.

★ ★ ★

நல்லூர் ஸ்ரீசட்ட நாதர் கோவிலின் துர்க்கை அம்பாளுக்கு இன்று காலை 9-30 மணிக்கு 1008 சங்காபிஷேகம் நடைபெறும். மாலையில் அம்பிகையின் தெருவீதி உலாவும் இடம் பெறும். [த]

# 31'ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 20 — 10 — 1976



உதிர்வு: 01 — 03 — 1992

## வேலாயுதபிள்ளை ஜெயக்குமார் (மலரோன்)

மாதம் ஒன்று ஆனதே! இன்னும் எங்கள் துயரம் ஆறாமல் தவிக்கின்றோம் - என்று உங்கள் இன்முகம் காண்போம், ஏங்குகின்றோம் எப்பொழுதும் கண்ணீரே!

இன்று [31-3-92] செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொண்டு, அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

— குடும்பத்தினர்.

நிதி வீதி,
அல்லாரை தெற்கு,
மீசாலை.

[20296]

# திருமண அழைப்பு

மணமகன்:

## ஏரம்பமூர்த்தி பாலசுப்பிரமணியம்

மணமகள்:

## வசந்தா தங்கவேல்

[ஆசிரியை, புங்குடுதீவு ஸ்ரீ சண்முகநாதன் வித்தியாலயம்-தற்போது - பேராதனை ஆசிரிய கலாசாலை]

இடம்: ஸ்ரீ பத்திரகாளி அம்மன் தேவஸ்தானம், மயூறா பிளேஸ், வெள்ளவத்தை.

காலம்: 04 — 04 — 1992 சனிக்கிழமை

உறவினர்களையும், நண்பர்களையும் திருமணத்திற்கு வருகை தந்து, மணமக்களை வாழ்த்தி அருள வேண்டுகிறோம்

திருமதி ஏரம்பமூர்த்தி,
பாலாவோடை,
காரைநகர்.

திரு. ப. தங்கவேல்,
2ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

கொழும்பு முகவரி:
No 201, 2/3, W. A. Silva Mawatha,
Colombo - 6.

[சி-1783]

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சின்னம்மா இரத்தினம்

புங்குடுதீவு 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், பாண்டியன்தாழ்வை வதிவிடமாகக் கொண்டவருமான திருமதி சின்னம்மா இரத்தினம் 30-3-92இல் காலமானார். இவர் இரத்தினத்தின் அன்பு மனைவியும், குமாரசாமி [மலேரியா தடுப்பு இயக்கம்], சரஸ்வதி, நடராசா [கலைவாணி புத்தகசாலை முன்னாள் ஊழியர்], அருணாசலம் [யாழ். ப. நோ. கூ. ச. ஊழியர்] ஆகியோரின் அன்புத் தாயாரும், பேபி சரோஜா [கோப்பாய் ஆஸ்பத்திரி], கணபதிப்பிள்ளை [யாழ். பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர்], புனிதவதி ஆகியோரின் மாமியாரும், விஜி, அனா, யோகன்ராஜா, ஹேமமாலினி, தாசிலி, மகிந்தன், நேசஜீவன் ஆகியோரின் பேத்தியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 31-3-92 பிற்பகல் 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

தகவல்:
இ. குமாரசாமி
[மகன்]

54/10, கொழும்புத்துறை றோட்,
பாண்டியன்தாழ்வு,
யாழ்ப்பாணம்.

[4590]

## கந்தப்பு ஆறுமுகம்

காரைநகர் பயிரிக்கூடலைச் சேர்ந்த கந்தப்பு ஆறுமுகம் நேற்று 30-3-92 காலமானார். அன்னார் பாக்கியத்தின் அன்புக் கணவரும், குமாரசாமி, கந்தசாமி, யோகேந்திரன், கணேசலிங்கம், தியாகலிங்கம், இராசலட்சுமி, விஜயலட்சுமி, தனலட்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையும், நடராசா, சபாரத்தினம், அருளையா கமலாதேவி, கணேசரஞ்சனி, கங்காதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 31-3-92 காலை 9 மணிக்கு சுழிபுரம் மேற்கு இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் திருவடிநிலை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, மக்கள்

தெல்லியான் வீதி,
சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம்.

[20302]

## க. சின்னத்துரை

[சைக்கிள் திருத்துனர்]

கரம்பொன் மேற்கு, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னத்துரை 29-3-92 அன்று காலமானார். அன்னார் நாகரத்தினத்தின் அன்புக் கணவரும் சுசீலா, சண்முகநாதன், காலஞ்சென்ற லலிதாம்பிகை, சாரதாம்பாள் [B. A., சங்கீத ஆசிரியை, மல்லாவி மகா வித்தியாலயம்], நகுலேஸ்வரி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஆவார். அவரது ஈமக்கிரியை இன்று [31-3-92] காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செல்வி சாரதாம்பாள் (ஆசிரியை)

இல: 17, A B றோட்,
செம்மணி ஒழுங்கை,
அரியாலை.

[26299]


நல்லூர் பிரதேசச் செயலகம்

உதயன் - சஞ்சீவி நிறுவனத்தின் ஆதரவுடன் நடத்தும்

# தமிழ், சிங்கள புத்தாண்டு விழா போட்டிகள் - 1992

நல்லூர் பிரதேசச் செயலகம் நடத்தும் தமிழ், சிங்கள புத்தாண்டு விழாவை முன்னிட்டு பின்வரும் போட்டிகள் நடத்தப்படும்.

★ கவிதை ★ கட்டுரை
★ நாட்டுப் பாடல்

● விளையாட்டு
- ★ கரப்பந்து [மேல் விளையாட்டு]-ஆண்கள் வலைப்பந்து [பெண்கள்]
- ★ எல்லே [ஆண்கள்]
- ★ கயிறிழுத்தல் [ஆண்கள் - 09 பேர்]
- ★ கிளித்தட்டு

மேற்படி போட்டிகள் ஒவ்வொன்றுக்கும்

முதலாம் பரிசு: ரூபா 250-00
இரண்டாம் பரிசு ரூபா 150-00
மூன்றாம் பரிசு: ரூபா 100-00

மற்றும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

○ ○ ○

மாணவர்களுக்கென விசேட போட்டிகளும் நடத்தப்படும்.

★ பேச்சு ★ கவிதை ★ நாட்டுப் பாடல்

இவை ஒவ்வொன்றிலும் முதல் மூன்று இடங்களைப் பெறுவோருக்குச் சான்றிதழ் வழங்கப்படும்.

→ போட்டிகள் தொடர்பான மேலதிக விவரங்களையும், விதிகளையும் நல்லூர் பிரதேசச் செயலகத்தில் [உதவி அரசாங்க அதிபர் பணிமனையில்] பெற்றுக் கொள்ளலாம்.

ஆ. மகாலிங்கம்,
பிரதேசச் செயலர் / உ. அ. அ.

பிரதேசச் செயலகம்,
நல்லூர்.



Short-Hand & Typing

Pitmans (London)

புதிய வகுப்புகள் 01 - 04 - 1992 ஆரம்பமாகின்றன.

June மாதம் நடைபெற உள்ள பரீட்சைக்குத் தோற்ற விரும்புபவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

School of Business Administration

Nora Cross Street,
Jaffna.

[சி-1700]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் சமூகவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டதாக ஐவருக்கு மரண தண்டனை!

## ஒருவர் மன்னிப்பு அளிக்கப்பட்டு விடுதலை
## விடுதலைப் புலிகள் தரப்பில் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 31

அரசியல், சமூக விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் விடுதலைப் புலிகளினால் கைது செய்யப்பட்ட அறுவர் மீதான விசாரணைகள் பூர்த்தி அடைந்து விட்டன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்களில் ஐவருக்கு மரணதண்டனை வழங்கப்படுகிறது. ஒருவர் மன்னிப்பு அளிக்கப்பட்டு விடுதலை செய்யப்படுகிறார்.

கிளிநொச்சி, கனகாம்பிகைக் குளத்தைச் சேர்ந்த முனுசாமி யோசெப் [வயது 33] வவுனியா, நெலுக்குளத்தைச் சேர்ந்த இராமையா இராமலிங்கம் [வயது 41], கரவெட்டி – துன்னாலை தெற்கைச் சேர்ந்த தம்பன் செல்லத்தம்பி [வயது 42], உரும்பராயைச் சேர்ந்த முன்னாள் இரகசியப் பொலீஸ் அதிகாரி தி. தாமோதரம்பிள்ளை, குருநகரைச் சேர்ந்த யாழ். முன்னாள் உதவி மேயர் சொ. பேரின்பநாயகம் ஆகியோரே மரண தண்டனைக்கு உள்ளாகும் ஐவரும் ஆவர்.

விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட மற்றும் ஒரு நபரான மயிலிட்டியைச் சேர்ந்த சி. செல்லையா மன்னித்து விடுதலை செய்யப்படுகிறார்.

தமது வியாபார நலன்களுக்காக கூட்டுப்படைத் தலைமையகத்துடன் தொடர்புகளை ஏற்படுத்தி காட்டிக் கொடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக முனுசாமி யோசெப் மீதும்—

வவுனியா இராணுவத்துடன் தொடர்புகளை ஏற்படுத்தி காட்டிக் கொடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக இராமையா இராமலிங்கம் மீதும்—

கொள்ளை, பாலியல் வன்முறை போன்ற சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டதாக தம்பன் செல்லத்தம்பி மீதும்—

தமிழினத் தேசத் துரோகியான அல்பிரட் துரையப்பா கொலையில் ஈடுபட்டவர்களைக் கண்டு பிடித்து தண்டனை வழங்க வேண்டுமென முனைப்புடன் செயற்பட்டதாக முன்னாள் இரகசியப் பொலீஸ் அதிகாரி தி. தாமோதரம்பிள்ளை மீதும்—

தாமோதரம்பிள்ளைக்கு துணையாகச் செயற்பட்டதாக யாழ். முன்னாள் உதவி மேயர் சொ. பேரின்பநாயகம் மீதும் குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன. விசாரணைகள் பூர்த்தியாகி அவர்கள் குற்றவாளிகளாகக் கண்டறியப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இவர்களில் தி. தாமோதரம்பிள்ளை, சொ. பேரின்பநாயகம் மற்றும் மன்னிப்பு அளித்து விடுவிக்கப்படும் சி. செல்லையா ஆகியோர் கைதானது பற்றி 11-01-1992 இல் அறிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ)

## வெல்ல உற்பத்தி அதிகரிப்பு

தென்மராட்சி, மார்ச் 31

தென்மராட்சிப் பகுதியில் உள்ள தெங்கு–பனம் பொருள் உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்களில் இந்த வருடம் வெல்ல உற்பத்தி அதிகரித்துள்ளது.

வெல்லம் அதிக அளவு உற்பத்தி செய்யப்பட்ட போதிலும் போதிய சந்தை வாய்ப்புக் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (த-117)

## பிரெஞ்சு வைத்தியக்குழு அதிகாரிக்கு பிரிவுபசார விழா

பருத்தித்துறை, மார்ச் 31

பருத்தித்துறை சுகாதார வைத்தியசாலையில் கடமையாற்றி தற்போது மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் பிரான்ஸ் நாட்டு எம். எஸ். எப். வைத்தியக்குழுவின் சத்திரசிகிச்சை நிபுணர் செல்வி. டொறங்கோவின் பிரிவுபசார விழா அண்மையில் நடைபெற்றது.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரி திரு. கதிரவேற்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் வைத்தியசாலை ஊழியர்களும், அபிவிருத்திச் சபையினரும் கலந்து கொண்டனர். (த-118)

## கஷ்டப் பாடசாலைகளாக மேலும் இரண்டு பிரகடனம்

பருத்தித்துறை, மார்ச் 31

வடமராட்சி கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த மேலும் இரு பாடசாலைகள் கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளாக மாகாண கல்வி அமைச்சினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

மாமுனை அ. த. க பாடசாலை, கப்புது அ. த. க பாடசாலை ஆகிய பாடசாலைகளே இவ்வாறு பிரகடனம் செய்யப்பட்டுள்ளன.

இதன் காரணமாக இங்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு பதினைந்து சத வீதம் சம்பளம் அதிகரிப்பு கிடைக்க உள்ளது. (த-118)

## மீண்டும் மினிபஸ் சேவை

பருத்தித்துறை — யாழ்ப்பாணம் 751 மினிபஸ் சேவை விரைவில் ஆரம்பமாகவுள்ளது.

இதுவரை திருத்தப்படாதிருந்த பருத்தித்துறை கடற்கரைவீதி வல்வெட்டித்துறை வரை திருத்தப்பட்டதை அடுத்தே மினிபஸ் சேவை ஆரம்பமாக உள்ளது.

## திருமலையில் விபுலானந்தர் நூற்றாண்டு நினைவு விழா

திருகோணமலை, மார்ச் 31

சுவாமி விபுலானந்தர் காலத்தால் அழியாத பல்வேறு கருத்துப் பெட்டகங்களை நம் மத்தியில் விட்டுச் சென்றுள்ளார். இவை தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதன் மூலம் மேலும் பயனுள்ள தகவல்களை நாம் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் சமுதாயத்திற்கு நன்மை பயக்கக் கூடிய விடயங்களையும் அறிந்து கொள்ள முடியும்.

திருகோணமலையில் விபுலானந்தர் நூற்றாண்டு விழா அண்மையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது இது தொடர்பாக திருகோணமலை இந்துக் கல்லூரி திறந்த வெளியரங்கில் இடம்பெற்ற சிலை திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போது திருகோணமலை மேலதிக அரசாங்க அதிபர் என். புவனேந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

கொழும்பு இராம கிருஷ்ண மிஷன் சுவாமி ஆத்மாநந்தா ஆசியுரை வழங்கியதுடன் திருவுருவச் சிலையை திரை நீக்கமும் செய்து வைத்தார். சிலையை உருவாக்கிய சிற்பியும், இளைப்பாறிய ஆசிரியருமான பிரம்மஸ்ரீ. எஸ். பத்மநாபசர்மாவுக்கு வட—கிழக்கு மாகாணசபை பிரதம செயலாளர் சொ. கணேசநாதன் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

கலாநிதி மௌனகுரு, ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் செ. யோகராஜா, வட—கிழக்கு மாகாணக் கல்வி, கலாசார அமைச்சின் உதவிப் பணிப்பாளர் எஸ். எதிர்மன்னசிங்கம் உட்படப் பலர் உரையாற்றினர். (த)

## பாம்புக் கடியினால் மரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 31

கடந்த வாரம் வவுனியாவுக்கு வியாபாரம் சம்பந்தமாகச் சென்றவர் பாம்பினால் கடியுண்டு மரணமானார்.

வண்ணார் பண்ணை முருகமூர்த்தி வீதியைச் சேர்ந்த கந்தசாமி மணிராஜ் [வயது 31] என்ற குடும்பஸ்தரே இவ்வாறு மரணமானவராவார். [த-15]

## இலங்கை வங்கி நடைமுறைகளில் பாரதூரமான ஒழுங்கீனங்கள்

கொழும்பு, மார்ச் 31

இலங்கை வங்கியின் கடன் வழங்கல் நடைமுறைகள் உட்பட மற்றும் பல்வேறு அம்சங்களில் பாரதூரமான ஒழுங்கீனங்கள், குறைபாடுகள் இருப்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கை வங்கி குறித்த கணக்காளர் நாயகம் டபிள்யு. காமினி எப்பாவினால் தயாரிக்கப்பட்ட அண்மைக்கால அறிக்கையிலேயே மேற்படி விவரங்கள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

வங்கியின் மொத்தக் கடன் தொகையான 2 ஆயிரத்துத் தொளாயிரம் கோடி ரூபாவில் கிட்டத்தட்ட 16 வீதம் நீண்டகாலமாகச் செலுத்தப்படாமல் கடந்த கால மேலதிக நிலுவையாக கணக்குகளில் உள்ளது.

கூட்டு நிதியக் கிளை மூலம் அளிக்கப்பட்ட கடன் வசதிகளில் கடந்த கால மேலதிக நிலுவைகளாக 300 கோடி உள்ளது.

1981—87 காலப் பகுதியில் 6 கோடி 54 லட்சத்து 52 ஆயிரத்து 842 ரூபாவைக் கடனாகப் பெற்ற எட்டுப் பேரில் ஒருவர் கூட, ஒரு தவணைப் பணத்தையாவது திருப்பிச் செலுத்தத் தவறிவிட்டனர்.

இப்படி மேலும் பல்வேறு குறைபாடுகள் ஒழுங்கீனங்கள் அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

கடன் வழங்கல் நடைமுறைகளில் வங்கி ஒழுங்கீனங்களுக்கு இடமளிக்காத வகையில் கடுமையான நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் எனவும் அந்த அறிக்கை வற்புறுத்துகிறது. [த-5]


31 ஆவது நாள்
நினைவஞ்சலி



கணபதிப்பிள்ளை பரமநாதன்
(இராசலிங்கம்)
(இளைப்பாறிய மின்சார சபை-பாதையாளர்)

மண்ணகம்: 17 - 07 - 1932
விண்ணகம்: 02 - 03 - 1992

எங்கள் எல்லோருக்கும் தலைவனாய் இருந்த அப்பா! எங்களை பாதியிலே தவிக்கவிட்டு சிவராத்திரி தினத்தன்று சிவனடி சேர்ந்தீர்களே.

எங்கள் தலைவனின் ஆத்ம சாந்திக்காக நாளை (01 - 04 - 1992) முற்பகல் 9-00 மணிக்கு நடைபெறும் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும், நண்பகல் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

தாய், மனைவி, மகன்.

32, புறாடி ஒழுங்கை,
அரியாலை.

80 ஆவது நாள்
நினைவஞ்சலி



கணபதிப்பிள்ளை சண்முகம்
[புகையிரதத் திணைக்கள முன்னாள்-ஊழியர்]

மண்ணில்: 02 - 12 - 1942
விண்ணில்: 14 - 01 - 1992

அன்பு மகனே!

பெற்றவள் நான் இங்கிருக்க நீங்கள் இருவரும் விண்ணுலகம் சென்றதென்ன, மண்ணுலகம் விட்டு விண்ணுலகம் சென்று நீவீர் இருவரும் என்றும் எம் இதயத்தில் இருந்து நீங்கிடாதிருப்பீர்கள்.

அன்பு மைத்துனரே! பாசப் பிணைப்புடனே அண்ணனுடன் விண்ணுலகில் வாழ்ந்திடுவீர்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

தாய், மைத்துனி.

32, புறாடி ஒழுங்கை,
அரியாலை.

[20290]

NORTHERN PROVINCE
CANCER SOCIETY

The Annual General Meeting of this Society would be held on Saturday 04-04-1992 at 3-00 p.m. at the office of the M. O. H, Jaffna, situated at 107, Kandy Road.

AGENDA:-

1. Election of Office Bearers for 1992/93
2. Discussion of Future Activities of the Society
3. Any Other Business.

All members are kindly requested to be present without fail.

-PRESIDENT.

[20294]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பழைய பத்திரிகைகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் எம்மிடம் விற்பனைக்குண்டு. மொத்தமாக எடுப்பவர்களுக்கு கழிவுண்டு. நூலாசிரியர் சத்தியதாஸனின் புதுவருட பலன்களும் விற்பனைக்குண்டு, கனகா ரேடேர்ஸ், திருநெல்வேலி சந்தி.

[20241]

### விற்பனையாகின்றது

ஏப்ரலில் நடைபெறவிருக்கும் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான, துரித மீட்டல் வினா-விடைப்பயிற்சிகள் கணிதம் 5 வினாத்தாள்கள், தமிழ் 5 வினாத்தாள்கள். ஆக்கம்: திருமதி ப. இளங்கோ. [உடுவில் மகளிர் கல்லூரி] வெளியீடு: சோதி வெளியீட்டு வாரியம். எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

[சி/1742]

### மாணவர் அகராதி

ஆங்கிலம் படிக்கிறீர்களா? உங்களுக்கு கிடைக்கக் கூடிய மிகச் சிறந்த ஆங்கில, தமிழ் அகராதி 'வரதர் மாணவர் அகராதி' ரூபா 95/- எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். ஆனந்தா புத்தகசாலை, 226, காங்கேசன்துறை சாலை, யாழ்ப்பாணம்,

[சி-1699]

### மாதிரி வினாத்தாள்கள்

A/L 91 பரீட்சைக்குத் தயாராகும் விஞ்ஞான மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். Bond Institutes, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(4577)

### புலமைப் பரிசில் பரீட்சை

ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான விசேட வினாத்தாள்கள் மலிவாகப் பெற்றுக் கொள்ளலாம். விடையளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்திக் கொடுக்கப்படும். Bond Institutes, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[4578]

## பெண்களுக்கு சமத்துவம்: சீனாவில் சட்டமூலம்

பீகிங், மார்ச் 31

சீனாவில் பெண்களுக்கு சமத்துவம் வழங்கும் சட்டமூலம் ஒன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

வேலைத்தலங்கள், வீடுகள், பள்ளிகள், நீதிமன்றங்கள்ஆகிய இடங்களில் பெண்கள் சமமான முறையில் நடத்தப்பட இந்த சட்டமூலம் வழிவகுக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. [இ-த]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

31—03—1992



அமரர்

## கைலாசபிள்ளை கந்தசாமி

( முன்னாள் பிரதி அதிபர், யாழ். மத்திய கல்லூரி )

நல்லவனாய் வாழ்ந்து நானிலத்தில் புகழுடனே
வல்லவனாய் வாழ்ந்தும் வடிவு செய்தாய் — நில்லாது
ஓடிப்பறந்திட்ட உத்தமனே! — உனைத்தேடி
வாடி வதங்குகின்றோம்.

நன்றி

அன்பு — பண்பு — பாசம் ஆகிய முக்குணங்களிலும் சிறந்து வாழ்ந்து, எம் வாழ்வை நெறிப்படுத்திய, எம் அருமைத் தந்தையின் சகல கிரியைகளிலும் பங்கு கொண்டு, எம்மைச் சிறப்புறுத்திய சகல அன்புள்ளங்களுக்கும் எங்கள் நன்றி.

மனைவி, மக்கள்.

36, இனிசம் றோட்,
தெஹிவளை,
கொழும்பு.

(20293)

COMMERCIAL BANK

# வளமான சேமிப்பிற்கு வடக்கில் ஓர் புதிய பாதை
# உங்கள் வங்கி வழங்கும்

வர்த்தக வங்கி சேமிப்புச் சான்றிதழ்
COMBANK SAVINGS CERTIFICATE

வர்த்தக வங்கி சேமிப்புச் சான்றிதழ் உறுதிசெய்வது:-

★ வைப்பிலிடும்போதே வளமான வட்டி
★ கவர்ச்சிகரமான வட்டி விகிதங்கள்
★ வட்டி மீதான பிடிப்புவரி விலக்கு (No Withholding Tax)
★ முத்திரைத் தீர்வு விலக்கு (No Stamp Duty)
★ கடன் பெற இலகுவான பிணை உறுதி
★ நியமிக்கும் மறு உரித்தாளருக்கு பணம்

மக்கள் சேவையில்
முதன்மையான உங்கள் வங்கி
வெகுவிரைவில் வழங்கும்

# புத்தாண்டுப் பரிசுத்திட்டம்

நாடு பூராவும் உள்ள எமது கிளைகளில் ரூ. 500/-, ரூ. 1,000/-, ரூ. 5,000/-, ரூ. 10,000/- ஆகிய பெறுமதிகளில் 6, 12, 24 மாத காலங்களில் முதிர்வடையும் சான்றிதழ்களைப் பெறலாம்.

சான்றிதழுக்கான அட்டவணை:

| நீங்கள் கொடுப்பது | | | நீங்கள் பெறுவது |
|---|---|---|---|
| 6 மாதங்கள் | 12 மாதங்கள் | 24 மாதங்கள் | முதிர்ச்சியின் போது |
| 14.5% இல் | 15.5% இல் | 16.5% இல் | |
| ரூ. 465/- | 433/- | 375/- | ரூ. 500/- |
| ரூ. 932/- | 866/- | 750/- | ரூ. 1000/- |
| ரூ. 4662/- | 4330/- | 3760/- | ரூ. 5000/- |
| ரூ. 9325/- | 8659/- | 7519/- | ரூ. 10000/- |

★ எம்மை நாடுங்கள் ★ சேமியுங்கள் ★ வளருங்கள்

## வர்த்தக வங்கி

474, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## உங்கள் வெற்றி எங்கள் பலம்

தலைமையலுவலகம்: "கமர்ஷியல் இல்லம்",
21, பிறிஸ்டல் வீதி, கொழும்பு - 1.

எமது ஏனைய கிளைகள்:

வெளிநாட்டுக் கிளை (கொழும்பு), நகரக்கிளை (கோட்டை), புறக்கோட்டை, கொள்ளுப்பிட்டி, கொட்டாஞ்சேனை, வெள்ளவத்தை நாரஹேன்பிட்டி, பொரளை, நுகேகொடை, மகரகம, கட்டுநாயக்கர (F.T.Z), நீர்கொழும்பு, வென்னப்புவ, கண்டி, மாத்தளை, கேகாலை, கல்லேவல குருநாகல், ஹிங்குராங்கொடை, ஹிக்கடுவ, காலி, மாத்தறை.

[சி-1744]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### ஆய்வுப் பணி அரும்பணி

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற சஞ்சிகை வெளியீட்டு விழா ஒன்றில், தமிழ் மண்ணில் மேற்கொள்ளப்பட வேண்டிய ஆய்வுகள் குறித்துப் பிரஸ்தாபிக்கப்பட்டது.

தமிழ்ழம் என்ற கருத்து நிலையினை மேன்மேலும் வலுப்படுத்த வேண்டுமானால் எந்தெந்த நிலைகளை அடைவதற்கு மக்கள் பாடுபட வேண்டும் என்பதனை ஆய்வுகள் மூலம் தீர்மானிப்பது அவசியம் —

மக்களை எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளுக்கு அவர்கள் எவ்வாறு முகம் கொடுக்கலாம் என்பதனை எடுத்துச் சொல்லுகின்ற — உதவுகின்ற — ஆய்வுகள் தேவை —

என்ற இரண்டு அம்சங்கள் அப்போது முன் வைக்கப்பட்டிருக்கின்றன.

உரிமைப் போராட்டத்தின் விளைவாக — அதன் பக்க பலன்களாக — இப்போது அரசியல், பொருளாதார, சமூக மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. முத்துறைகளிலும் எழுச்சியுடன் விழிப்புணர்வு ஏற்பட்டு, புதிய பரிமாணங்கள் உருவாகி வருகின்றன.

இத்தகைய மாற்றமுறு காலத்தில் பல்வேறு துறைகளிலும் மக்கள் பல புதிய பிரச்சினைகளையும், கஷ்டங்களையும் எதிர்நோக்குவது வழமையே, இயல்பே. மக்களின் அந்தப் பிரச்சினைகளையும், கஷ்டங்களையும் தீர்க்கக் கூடிய நடைமுறைச் சாத்தியமான வழிகள் கண்டறியப்பட வேண்டியது மிகவும் அத்தியாவசியமானதாகும். மக்கள் பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் இல்லாவிடில் சமூக உயிர்ப்பும், வாழ்வும் பாதிக்கப்பட்டுவிடும்.

எனவே ஆய்வுகள் வெறும் ஆய்வுகள் என்ற பெயருக்காகச் செய்யப்படாமல் மக்களின் தேவைகளை - சமூகத் தேவைகளை - பூர்த்தி செய்யக் கூடியவையாக இருக்கவேண்டும்.

ஆய்வு செய்பவர்கள் காலத்தின் தேவை அறிந்து தங்கள் ஆய்வுக்குரிய துறைகளை, பொருள்களைத் தெரிவு செய்ய வேண்டும். ஆய்வுகளும் எமது பிரதேசத்தின் பின்னணி, மூலவளம், பாதிப்புகள், சுயதேவைப் பூர்த்தி, நீண்டகால அபிவிருத்தி ஆகியனவற்றை அனுகுபவைகளாக அமைய வேண்டும். மக்கள் வாழ்வை வளம்படுத்துவதும், மேம்படுத்துவதுமே ஆய்வுகளின் நோக்கங்களாகக அமைதல் வேண்டும். அதற்கான தரவுகள் கண்டுபிடிப்புகள், வழிமுறைகள், வழிகாட்டுதல்கள் என்பனவற்றை மக்களுக்கு வழங்கும் விதத்திலும் ஆய்வுகள் அமைத்தல் அவசியம்.

மொத்தத்தில் ஆய்வுகள் வெறும் ஏட்டுச் சுரைக்காய்களாக இல்லாமல் நடைமுறைப் பயன்பாடு தருவனவாக இருப்பது அவசியம். ஆராய்ச்சி செய்பவர்களின் பட்டப்பெயர்களை, பெயர்ப்பின் எழுத்துக்களை அதிகரிக்கும் நோக்குடன் மட்டும் இல்லாமல் மக்கள் நலனை முன்நிறுத்தியே செய்யப்பட வேண்டும். சமூகப் பிரக்ஞையுடன் ஆற்றவேண்டிய அரும்பணி ஆய்வுப் பணி என்பதை மறந்துவிடக்கூடாது.

ஏனைய இடங்களில் செய்யப்படும் ஆய்வுகளின் படிமுறைகளை அப்படியே உள்வாங்கி இரை மீட்டுத் தரும் வகையான ஆய்வுகள் எமது மக்களுக்குத் தேவையில்லை, தமிழ் மக்களை, தமிழ் மண்ணை முன் நிறுத்திய தனித்துவமான அதே வேளை சுயேச்சையான ஆய்வறிக்கைகளே இன்றைய தேவை.

# விசர்நாய் கடித்த உடனேயே தடுப்பு நடவடிக்கை அவசியம்

## இல்லையேல் முடிவு மரணமே

**யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் பணிமனையில் அண்மையில் விசர் நாய்க்கடி தொடர்பான சுகாதாரக் கருத்தரங்கு நடைபெற்றது. யாழ் சமூக, மருத்துவ பீடத்தைச் சேர்ந்தவரும், யாழ். செஞ்சிலுவைச் சங்கத் தலைவருமான டாக்டர் சி. என். நச்சினார்க்கினியன் இக் கருத்தரங்கில் தெரிவித்தவை கீழே பிரசுரமாகி உள்ளன.**

தொகுப்பு: ஐ. செல்லையா

விசர் நாய்க்கடி நோய் யாழ். மாவட்டத்தில் ஒரு முக்கிய பிரச்சினை ஆகும். போர்க்காலச் சூழ்நிலை இப்பிரச்சினையை மேலும் சிக்கலாக்குகிறது.

1991இல் 15பேர் இந்நோயினால் இறந்தனர் இந்த ஆண்டின் முதல் மூன்று மாதங்கள் முடிவதற்குள் 10 பேர் இறந்து விட்டனர்.

கட்டாக்காலி நாய்களால் கடிபடுவோர் எண்ணிக்கையும் கூடிக்கொண்டுபோகிறது. அதே சமயம் ஏ. ஆர். வி. தடுப்பூசி மருந்து கொழும்பிலிருந்து குறைவாகவே வருகிறது. இதனால் மேலும் மரணங்கள் அதிகரிக்கலாம்.

### மருந்து கிடையாது

விசர் நாய்க்கடி நோயின் அறிகுறிகள் தோன்றினால் இதனை மாற்ற மருந்து கிடையாது. அதன் முடிவு மரணமே. மருந்துக்காக அரசாங்கத்தை நம்பியிருப்பதிலும் பார்க்க இந்நோயைத் தடுப்பது மிகவும் அவசியம்.

இந்நோய் விசரினால் பாதிக்கப்பட்ட நாய்கள் மூலம் (நாய்களிலும், மனிதனிலும்) பரவுகிறது. இந்நோய்க்கு காரணமான வைரஸ் கிருமிகள் விசர்நாயின் எச்சிலில் ஏராளமாக இருப்பதால் நோயுற்ற நாய் மனிதருக்கு கடிக்கும்போது நோய் மனிதருக்கும் உண்டாகிறது உரசல் காயங்களில் விசர்நாய் நக்குவதாலும் நோய் பரவ முடியும்.

### நோயின் அறிகுறிகள்

நோய் கண்ட ஆரம்பத்தில் நாயின் நடமாட்டத்தில் மாற்றமும், உணவில் விருப்பமற்ற நிலையும் ஏற்படும்.

மூலையில் பதுங்குதல், கட்டளைக்கு கீழ்ப்படியாமை, அளவுக்கு மீறிய அன்பை வெளிப்படுத்தல் ஆகியன தென்படும்.

அத்துடன் இந்த நாய் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் திடீரெனக் கடிக்கும். காரணம் இல்லாமல் அலையும், உரத்த சத்தத்தில் கத்தும். களைப்பாகக் காணப்படும். வாயிலிருந்து எச்சில் வடியும். அதன் வாய் உயிரற்ற நிலையில் தொங்கும். நடையில் தள்ளாட்டமும் தொடர்ந்து தசை நார்கள் விறைத்து பாரிசவாதமும் ஏற்படும். இந்தப் பாரிசவாதம் முதலில் பின்னங்கால்களையும் பின்னர் முன்னங்கால்களையும் பாதிக்கும். அடுத்து நாய் செயலிழந்து படுக்கும்.

இந்த அறிகுறிகள் ஏற்பட்டு 10 நாட்களில் நாய் இறந்துவிடும், இந்நிலையில் தண்ணீரைக் காணும் போது நாய் பயப்படும் இதனால் இந்நோயை நீர்வெறுப்பு நோய் (Hydrophobia) என்றும் கூறுவர்.

### பாதிக்கப்பட்ட மனிதனில் காணும் அறிகுறிகள்

ஒரு மனிதனுக்கு இந்த நோய் தொற்றும் போது இரு கிழமைகள் தொடக்கம் ஆறு மாதங்கள் வரை நோய் அரும்பு காலமாகும். சில வேளை ஒரு வருடமும் ஆகலாம். முகம், மூளைக்கு கிட்டிய இடங்களில் கடி ஏற்பட்டால் இக் காலம் குறையலாம்.

★ கடி ஏற்பட்ட இடத்தில் நோவு. எரிவு, சுள்ளிடுதல் போன்ற உணர்வு ஏற்படும்.

★ உணவு உண்ணும் போது தொண்டை நோகும்- விழுங்க முடியாத நிலை ஏற்படும். வாயிலிருந்து உமிழ் நீர் வெளியேறும்.

★ திடீரெனக் கோபம் ஏற்படும்.

★ வலியும், பாரிசவாதமும் இதனை அடுத்து மரணமும் சம்பவிக்கும்.

### நோய்த்தடை

கடித்த நாய்க்கு விசர் இருப்பதாக சந்தேகித்தால் முதலில் காயங்களை சவர்க்காரத்தாலும் நீராலும் கழுவுதல் வேண்டும். உடனடியாக வைத்தியசாலைக்குச் சென்று தடுப்பூசி ஏ. ஆர். வி. போட வேண்டும். இதனைத் தொடர்ந்து பதினான்கு நாட்களுக்கு தினமும் ஒரு ஊசியும், 14 ஆவது நாளிலிருந்து 10 ஆவது நாளில் ஒரு ஊசியும், 20 ஆவது நாளில் ஒரு ஊசியும், 90 ஆவது நாளில் ஒரு ஊசியுமாக 17 ஊசிகள் போடவேண்டும்.

இதனால் தடுப்புச் சக்தி ஆறு மாதங்களுக்கு மாத்திரம் ஏற்படும். ஹியூமன் டிபுளோய்ட் செல் வக்சீன (Human Deployed Cell Vaccine) நான்கு மாத்திரம் போடலாம். முதல் நாள் இரு தோள்களிலும் இரண்டு ஊசிகளும், மூன்றாவது நாள் ஒரு ஊசியும், ஏழாவது நாள் ஒரு ஊசியும் ஆக நான்கு ஊசிகள் போட வேண்டும். இது விலை கூடிய ஊசி மருந்தாகும்.

அலைந்து திரியும் நாயினால் கடிபட்டவர்கள், தூண்டுதலில்லாமல் கடிபட்டவர்கள் கட்டாயம் தடுப்பூசி போடவேண்டும்.

கடித்த நாய் 10 நாட்களில் இறந்திருந்தாலும் கட்டாயம் தடுப்பூசி போட வேண்டும்.

இன்றைய யுத்தகால சூழ்நிலையில் தடுப்பூசி மருந்து குறைந்த அளவே வருகிறது.

எனவே பொது மக்களும் பொதுப் பணி மன்றங்களும், உள்ளூராட்சி மன்றங்களும், சுகாதாரப் பகுதியினரும் ஒன்றிணைந்து கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழித்தல், நாய்களுக்கு நஞ்சூட்டி அழித்தல், வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி போடுதல் ஆகிய முறைகளைக் கையாளுவதன் மூலமே இந்நோயைக் கட்டுப்படுத்தலாம்.

இந்த நோய் சம்பந்தமான கல்வி அறிவை மக்கள் மத்தியில் பரப்ப வேண்டும். மக்களும் பூரண பங்களிப்பு நல்க வேண்டும். விசர் நாய்க்கடி நோய் வந்தபின் மாற்ற முடியாது. வராமல் தடுப்பதே மிகவும் அவசியம். (இ-118)

# தேநீர் சாலைகள், உணவு விடுதிகள் இன்று முதல் திடீர் சோதனைகள்

யாழ்ப்பாணம், மார்ச் 31

யாழ். மாநகரசபை உணவு சுகாதாரப் பரிசோதகர் தலைமையிலான குழுவினர் இன்று முதல் தேநீர்ச்சாலைகள், மற்றும் உணவு விடுதிகள் என்பவற்றில் திடீர் சோதனைகளை நடத்துவர்:

சுகாதார விதி முறைகளைப் பேணாத உணவுச்சாலைகள் மீதும் —

மற்றும் கலப்படம் செய்யப்பட்ட உணவு வகைகளை விற்பனை செய்யும் உணவுச் சாலைகள் மீதும் —

யாழ் மாநகர சபை விதிகளுக்கு அமையக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ் மாநகர சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன் தெரிவித்தார்.

சுகாதார நலன் பேணும் விதி முறைகள் பற்றிய துண்டுப் பிரசுரம் ஒன்றையும் திடீர் பரிசோதனைக் குழுவினர் சகல தேநீர் மற்றும் உணவுச் சாலைகளுக்கும் விநியோகிக்க உள்ளனர். [இ-5]

# தமிழகத்தில் புலிகள் ஊடுருவலாம் பாதுகாப்புப் படைகள் உஷார்!

சென்னை, மார்ச் 31

தமிழ் நாட்டுக்குள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஐந்துபேர் கொண்ட தற்கொலைப்படைப் பிரிவு ஒன்று ஊடுருவல் செய்து இருப்பதாகக் கூறப்படுவதைத் தொடர்ந்து அங்கு பாதுகாப்புப் படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்படுகின்றது.

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளுக்கான தமிழ் நாடு தளபதி கணேசன் என்பவர் தற்கொலைப் படைப் பிரிவுக்குத் தலைமை வகிப்பதாக தமிழ்நாடு அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்கொலை செய்து கொண்ட சிவராசன் முன்னர் மேற்கொண்ட யுத்த நடவடிக்கைகள், திட்டம் தீட்டுவது ஆகியவற்றை கணேசன் இப்போது மேற்கொண்டு வருவதாகவும் கூறப்பட்டது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கின் எதிரிகள், மற்றும் சாட்சிகள், ஆகியோரையும் தமிழக அரசியல்வாதிகளையும் ஒழித்துக்கட்டும் பொறுப்பு தற்கொலைப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும் தமிழக வட்டாரங்கள் கூறின.

அதேவேளை — தமிழ் நாட்டில் இருந்த விடுதலைப் புலிகளினால் அனுப்பப்பட்ட தகவலை தமிழகப் பொலிஸார் இடைமறித்துக் கேட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது

இதனைத் தொடர்ந்து தமிழகத்தில் தீவிரவாத நடவடிக்கைகள் முற்றாக ஒழித்துக்கட்டப்படவில்லை என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும் இவ் வட்டாரங்கள் கூறின [த-எ]

### காரைக்காலில் பிடிபட்ட

## கப்பலை சுங்கப் பகுதியிடம் ஒப்படைக்க உத்தரவு

கடந்த வருடம் நவம்பர் மாதம் ஆறாம் திகதி இந்தியக் கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட டொங்கோவா என்ற கப்பலை சுங்கத் திணைக்களத்திடம் ஒப்படைக்குமாறு [illegible] விசேட நீதிமன்ற [illegible] உத்தரவிட்டார்.

இந்தியாவின் காரைக்கால் கடற்பகுதியில் வைத்து இந்திய கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட இப்படகில் இருந்து 10 பேர் கைது செய்யப்பட்டதும்—

ஆயுதங்களைக் கடத்த [illegible] மீது [illegible]ப்பட்டிருப்பதும் தெரிந்தவையே. (இ-எ)

### ஊரடங்கு நீக்கம்

கொழும்பு, மார்ச். 31

வவுனியா மாவட்டத்தில் நெடுங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் அமுலில் இருந்த ஊரடங்குச்சட்டம் நேற்று காலை ஆறு மணியுடன் நீக்கப்பட்டுவிட்டதாக கூட்டுப் படைகள் தலைமை அலுவலகம் அறிவித்தது.

எனினும் — முல்லைத்தீவு மாவட்டத்தில் அமுலில் உள்ள ஊரடங்குச் சட்டம் மறு அறிவித்தல்வரை தொடர்ந்து நீடிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

### அன்னைபூபதியின் அஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச். 31

யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகத்தின்ஏற்பாட்டில அன்னைபூபதி நினைவஞ்சலிக் கூட்டம் இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ் பல்கலைக் கழக கைலாசபதி அரங்கில் நடத்தப்படவிருக்கிறது. பல்கலைக்கழக ஊழியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொள்வர்.

### கிரனேட் தாக்குதல்

மட்டக்களப்பு, மார்ச். 31

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சித்தாண்டி முஸ்லிம் கிராமம் மீது கடந்த வெள்ளிக்கிழமை கிரனேட் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டது. இத்தாக்குதலில் 6 பேர் காயமடைந்தனர். (உ-த)

### தமிழோசை அலைவரிசை மாற்றம்

லண்டன், மார்ச் 31

லண்டன் பி. பி. ஸியிலிருந்து ஒலிபரப்பாகும் தமிழோசை கடந்த ஞாயிறு தொடக்கம் வாரத்தில் ஏழு நாட்களும் ஒலிபரப்பாகி வருகிறது. உலகின் பல்வேறு பிராந்தியங்களிலும் வாழும் தமிழ் மக்கள் இந்த ஒலிபரப்பைக் கேட்க வசதியாக அலைவரிசை மாற்றங்களும் செய்யப்பட்டுள்ளன.

தற்போது தமிழோசை இலங்கை நேரப்படி இரவு 9.15 தொடக்கம் 49 மீட்டரில் 6065 கி. ஹேட்ஸிலும், 31 மீட்டரில் 9605 கி. ஹேட்ஸிலும், 19 மீட்டரில் 15360 கி ஹேட்ஸ்லும் ஒலிபரப்பாகின்றது. [உ-10]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காடுகளை வெட்டுவதை தடுக்க அவசரகால விதி!

சட்டவிரோதமாக மரம் தறிப்பது மற்றும் காடுகளை வெட்டுவதைத் தடுக்கும் அவசரகாலச் சட்ட விதிகள் ஜனாதிபதி பிரேமதாஸாவினால் நேற்று பிரகடனம் செய்யப்பட்டன.

இதன்படி, குற்றவாளிகளாகக் காணப்படுவோருக்குக் குறைந்தது 2 ஆண்டுகள் முதல் 10 ஆண்டுகள் வரை கடூழிய சிறைத் தண்டனையும் அத்துடன் குறைந்தது ஒரு லட்சம் ரூபா முதல் 5 லட்சம் ரூபாவரை அபராதமும் விதிக்கப்படும்.

இச் சட்டவிரோதச் செயல்களுக்கு பயன்படுத்தப்படும் இயந்திராதிகள், வாகனங்கள் மற்றும் வள்ளங்கள் முதலியவை பறிமுதல் செய்யப்படும்.

இச் சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடும் அல்லது உடந்தையாக இருக்கும் அரச அதிகாரிகளுக்கு குறைந்தது 5 ஆண்டுகள் முதல் பத்து ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படும். அவர்கள் மீது இரண்டரை லட்சம் ரூபா முதல் 5 லட்சம் ரூபா வரை அபராதம் விதிக்கவும் அவசரகாலச்சட்ட விதிகள் இடமளிக்கின்றன.

இச்செயல்களில் ஈடுபடுவோர் முதலில் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்படுவார்கள். பின்னர் அவர்கள் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படும்.

1940 இல் நாட்டில் 60 சத வீதமாக இருந்த காடுகள் இப்போது 23 சத வீதமாகக் குறைந்துள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

## வர்மா கமிஷன் கால எல்லை நீடிப்பு

புதுடில்லி, மார்ச் 31

ராஜீவ் காந்தி கலந்து கொள்ளவிருந்த ஸ்ரீ பெரும்புதூர் கூட்டத்திற்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றி விசாரணை நடத்தி வரும் வர்மா விசாரணைக் குழுவின் கால எல்லை மேலும் மூன்று மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜூன் 30 ஆம் திகதிக்கு முன்பதாக விசாரணையைப் பூர்த்தி செய்து அறிக்கையைச் சமர்ப்பிக்கும்படி விசாரணைக் குழுவின் தலைவரான நீதியரசர் ஜே. எஸ். வர்மா கோரப்பட்டுள்ளார். [த-எ]

## ஹெரோயின் வைத்திருந்த தமிழ் இளைஞர்

கொழும்பு - புறக்கோட்டை பிரதான வீதியில் சுமார் ஒரு கிலோ ஹெரோயின் போதை வஸ்துவுடன் தமிழ் இளைஞர் ஒருவரை போதை வஸ்துத் தடுப்புப் பொலிஸார் கைது செய்தனர்.

கைப்பற்றப்பட்ட ஹெரோயின் போதை வஸ்தின் வெளிச் சந்தைவிலை 15 லட்சம் ரூபா என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

## பிரேமா, லலித் ஒரே மேடையில்!

மாத்தளை பெர்னாட் அலுவிஹார மகா வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்ற மகாபொல புலமைப் பரிசில் வழங்கும் வைபவத்தில் ஜனாதிபதி திரு. பிரேமதாஸாவும், முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலியும் ஒரே மேடையில் கலந்து கொண்டு உரையாற்றினர்.

மகாபொல புலமைப் பரிசில் அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்படும் என்று ஜனாதிபதி அங்கு அறிவித்தார். [உ-எ]

## மின் விளக்குகள் அணைக்கப்படும்

அலங்கார மின் விளக்குகளை அணைக்கும்படி அரச திணைக்களங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு ஜனாதிபதி பிரேமதாஸா உத்தரவிட்டுள்ளார்.

ஜனாதிபதி இல்லம், ஜனாதிபதி செயலகம், பிரதமரின் இல்லம், சுதந்திர சதுக்கம் ஆகியவற்றில் உள்ள அலங்கார விளக்குகள் அணைக்கப்படுகின்றன.

வரட்சி காரணமாக நீர் மின்சார உற்பத்தி குறைந்துள்ளதே இந்த உத்தரவுக்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது. [த-எ]

### யுத்த நிறுத்தம்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வரும் நீடித்துச் செல்லும் போரால் மனம் நொந்து காணப்படுகிறார்கள். இரண்டு பக்கங்களிலும் மனித உயிர்கள் அநியாயமாக பறிபோகின்றன. —இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (அ-10)

### யாழ்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மைத்துப் புதுக்கி அமைப்பதற்கு ரூ.30 கோடி செலவிலான திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது.

30 கோடி ரூபாவில் ஒரு பகுதியைக் கொடுத்து உதவவும், தொழில்நுட்ப உதவிகளை வழங்கவும் சர்வதேச தொண்டர் நிறுவனம் ஒன்று இணக்கம் தெரிவித்துள்ளது.

மிகுதிப் பணத்தை வழங்குவதற்கு நோர்வேயில் வாழும் ஈழத்தமிழர்கள் முன்வந்துள்ளனர்.

இரண்டு நிதிகளையும் பெறுவதற்கான ஏற்பாடுகள் இப்போது நடைபெற்று வருவதாக இத்திட்டத்துடன் தொடர்புடைய பிரமுகர் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். [அ-3]

### எட்டுப்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேசக் குழுப் பிரதிநிதிகளை பல தடவைகள் சந்தித்துப் பேசியுள்ளார்.

கூட்டுப்படைகள் தளகர்த்தர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவையும் அவர் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

தமது உத்தேச யாழ். விஜயம் குறித்து கருத்து வெளியிடுகையில் வண. சித்தார்த்த தேரர் கூறியதாவது :-

இந்த நாட்டில் வாழும் சகல மக்களுக்கும் அவர்களது உரிமைகள் வழங்கப்பட வேண்டும். அதைவிடுத்து நிபந்தனைகளை விதித்துக் கொண்டிருப்பது சமாதானத்துக்கு ஊறு விளைவிப்பதாகும்.

பல்லின மக்கள் வாழும் இந்த நாடு சகல மக்களுக்கும் சொந்தமானது என்பதை அனைவரும் உணர வேண்டும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண சகல சமயத்தவர்களும் முயற்சி எடுப்பது அவசியம். சகல மதத்தவர்களும் இணைந்தால் பிரச்சினைக் [illegible] புத்தரின் வழியில் — [illegible] செய்வதற்கு புத்தாண்டு நல்ல சமயமாகும்.—என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜி. சீ. ஈ. (உயர்தரம்)

## விசேட பரீட்சைக்கான ஏற்பாடுகள் பூர்த்தி!

யாழ்ப்பாணம், மார்ச் 31

நாளை ஆரம்பமாக இருக்கும் ஜி. சீ. ஈ. [உயர்தர] விசேட பரீட்சைக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகி உள்ளன.

யாழ். மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள 66 பரீட்சை நிலையங்களுக்கும் தேவையான காகிதாதிகள் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை வாகனம் மூலம் — 10 இணைப்பு நிலையங்கள் ஊடாக — நேற்று வழங்கப்பட்டன.

இந்த பரீட்சை நிலையங்களில் கடமையாற்றும் மேற்பார்வையாளர்கள், இணைப்பு அதிகாரிகள் மற்றும் உத்தியோகஸ்தர்களுக்கான விளக்கக் கூட்டம் இன்று யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது. [உ-3]

## சொத்து வெளியிடத் தவறும் கூ. ச. தலைவர்கள் நீக்கம்

### அமைச்சர் கடும் எச்சரிக்கை

ஆண்டுதோறும் தமது சொத்துக்களை பிரகடனம் செய்யத் தவறும் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் பதவி நீக்கம் செய்யப்படுவர்.

கூட்டுறவு மற்றும் உணவு அமைச்சர் வீரசிங்க மல்லிமராச்சி இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

கூட்டுறவுச் சங்கக் கிளைகளின் முகாமையாளர்கள் ஆண்டுதோறும் இடம்மாற்றம் செய்யப்பட வேண்டும் என்றும் அமைச்சர் சொன்னார். [த-எ]

## கண்ணீர் அஞ்சலி



### திரு. கந்தையா கனகலிங்கம்

வேலணை வடக்கை பிறப்பிடமாகவும், கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்டவரும், காலி E. கைலாசபிள்ளை அன் கொம்பனி உரிமையாளரும், காலி ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலய பரிபாலன சபைத் தலைவரும் ஆகிய திரு. கந்தையா கனகலிங்கம் 16-02-92 அன்று காலியில் காலமானார்.

அன்னார் காலம்சென்ற திரு. திருமதி கந்தையா-தங்கம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும், காலம் சென்ற திரு. திருமதி வேலுப்பிள்ளை செல்லாச்சி தம்பதிகளின் மூத்த மருமகனும், விஸ்வலிங்கம் [பங்காளர், ஜெயபுர றைஸ் ஏஜென்சி, நாலாம் குறுக்குத் தெரு], கோபாலபிள்ளை [இளைப்பாறிய சிரேஷ்ட வரி மதிப்பாளர், வருமான வரித் திணைக்களம்] ஆகியோரின் மூத்த சகோதரரும், பாக்கியலெட்சுமியின் அன்புக் கணவரும், அரவிந்தன் [சூட்டி] [மேற்கு ஜேர்மனி], முரளீதரன் Ag. B. Sc [விவசாயத் திணைக்களம், திருகோணமலை], சரவணபவன் [காலி], வனிதா [ஆசிரியை ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, கோப்பாய்], சத்தியா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 19-02-92 அன்று கொழும்பு பாரளையில் நடைபெற்று, பூதவுடல் கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்

அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாகச் செலுத்துகிறோம்.

குறிப்பு:- அன்னாரது அந்தியேட்டிக் கிரியை 16-03-92 கொழும்பு முகத்துவாரத்திலும், வீட்டுக் கிருத்தியம் 17-03-92 காலியிலும் நடைபெற்றன.

தகவல்:
கோண்டாவில் கிழக்கு,
க. வனிதா
[20300]

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நாகம்மா வேலுப்பிள்ளை

நவாலி வடக்கைச் சேர்ந்த திருமதி நாகம்மா வேலுப்பிள்ளை 27-03-92 அன்று காலமானார். இவர் சுப்பிரமணியம், தெய்வநாயகி [ஆசிரியை, நவாலி மகா வித்தியாலயம்], செல்வரட்ணம் ஆகியோரின் அருமைத் தாயாரும், மகேஸ்வரி, அரியரட்ணம், லிங்கேஸ்வரி ஆகியோரின் மாமியாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 28-03-92 அன்று நவாலி ஆரையம்பதி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
''தெய்வ மாளிகை''
நவாலி வடக்கு,
மானிப்பாய்.
அ. ஜெநோதினி
[20301]

### திருமதி முருகையா இளையதங்கம்

இளவாலையைச் சேர்ந்த திருமதி முருகையா இளையதங்கம் நேற்றுக் காலமானார்.

இவர் காலம்சென்ற செல்லையா முருகையா [முன்னாள் உணவுக் களஞ்சிய உதவிப் பொறுப்பாளர்] அவர்களின் அன்பு மனைவியும், மு சிவராஜரட்ணம் [உதவிப் பணிப்பாளர், பண்டத்தரிப்பு கல்வி கோட்டம்] மு. திருஞானரட்ணம் [ரீமேக்கர் கல்பனா எஸ்டேட்], மு தேவதாசன் (ப. நோ. கூ. சங்கம், சங்கானை), மு. பிரேமதாசன் [ஹற்றன் நஷனல் வங்கி, திருகோணமலை], மு. சத்திபதரன் [லெபனான்] ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கலட்டியவத்தை
இளவாலை.
மு. சிவராஜரட்ணம் [மகன்]
[20304]

### நா. ஐயங்கர் (தம்பு)

புலோலி கிழக்கு, ஊரியவத்தையை பிறப்பிடமாகக் கொண்ட திரு. நா. ஐயங்கர் [தம்பு] நேற்றுக் காலமானார். இவர் வள்ளிப்பிள்ளையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பொன்னையா, சின்னக்குஞ்சி, சின்னம்மா, வள்ளிபிள்ளை ஆகியோரின் சகோதரரும் முத்தையா, சின்னத்தம்பி, காலஞ்சென்ற திருமதி ம. அன்னம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும், பொன்னுத்துரை [கமலா சராஜ் அன் இன்டஸ்றீஸ்], குமாரசாமி [மொடேண் எலக்ரிக்கல்], இராசஇரத்தினம் (பஷன் மோட்டோர்ஸ்], மகேஸ்வரி, கமலாவதி, குலவீரசிங்கம், சிவனேசு, லகுலராஜா, ரகுலேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், புவனேஸ்வரி, கமலாதேவி, செல்வம், சிவமலர், தனேஸ்வரி, தம்பித்துரை [மாஸ்ரர் கனடா], இராசேந்திரம் [சுகி இண்டஸ்றீஸ், ரகுலேந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், ரஜீந்திரன், ரஜிவதனன், சாந்தி, ஜெயந்தி, ரஜீகரன், வஸந்தி, துஷ்யந்தி, ஹரிசன், குபிதா, சுபிதா, ராஜகரன், டில்ஸ்ரன், சுதாசன், சுஜாதா, ரஜீவன், உமாஜோதி, உமாபதி, உமாசுதர்ஷினி, உமா சுதன் சுமதி, சுஜீவா, நிச்சன், தர்ஷியா, அஜந்தரோஜன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று காலை 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்;
இல. 28. பிறவுண் றோட்,
1 ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
ந. இராசேந்திரம் [மருமகன்]
[20303]

மரண அறிவித்தல்கள் 2 ஆம் பக்கத்திலும்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிரைவேட்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, [illegible] இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 31 3-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது